மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# நாலடியாரில் காணப்படும் குற்றியலுகரத்தின் இலக்கணப் பயன்பாடு

# The Usage of Kutriyalugaram in Naladiyar

ஜீவிதா முனியாண்டி / Jeevitha Muniyandy[1]
மனோன்மணி அண்ணாமலை / Manonmani Devi M. A. R. Annamalai[2]

[1]Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia

Date of Submission: 23-05-2026
Date of Acceptance: 05-06-2026
Date of Publication: 30-06-2026
Corresponding Author's Email: manonmanidevi@fbk.upsi.edu.my

**ஆய்வுச்சாரம்**

உலகப் புகழ்பெற்ற தமிழ் அறநூல்களில் ஒன்றான நாலடியார், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெற்றுள்ள சிறப்புமிக்க நீதி நூலாகும். 400 பாடல்களைக் கொண்ட இந்நூல் சமண முனிவர்களால் இயற்றப்பட்டது. அறம், ஒழுக்கம், கல்வி, நட்பு, நிலையாமை, அறவாழ்வு போன்ற உயர்ந்த வாழ்க்கை நெறிகளை எளிமையாக எடுத்துரைக்கிறது. இவ்வாய்வு, நாலடியாரில் காணப்படும் குற்றியலுகரத்தின் இலக்கணப் பயன்பாட்டை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது. நூலாய்வு முறையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு செய்யுள்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அவற்றிலுள்ள குற்றியலுகரச் சொற்கள் ஆறு வகைகளாக வகைப்படுத்தப்பட்டன. ஆய்வின் முடிவில், நாலடியாரில் குற்றியலுகரத்தின் பயன்பாடு இலக்கணச் சிறப்பை மட்டுமன்றி அறம், ஒழுக்கம் போன்ற வாழ்க்கை நெறிகளை வலியுறுத்தும் கருவியாகவும் விளங்குகிறது என்பது கண்டறியப்பட்டது. எனவே, இவ்வாய்வு தமிழ் இலக்கண ஆய்வுகளுக்குப் பயனுள்ள பங்களிப்பாக அமைகிறது.

**கருச்சொற்கள் :** நாலடியார் , குற்றியலுகரம்

**Abstract**

Naladiyar, one of the world-renowned Tamil ethical texts, is a distinguished didactic work included in the Pathinenkilkanakku (Eighteen Lesser Texts). Consisting of 400 quatrains, this work was composed by Jain monks. It conveys noble values such as virtue, morality, education, friendship, impermanence, and righteous living in a simple and effective manner. This study aims to examine the grammatical usage of Kutriyalugaram in Naladiyar. Using a library research method, seven selected verses were analyzed, and the Kutriyalugaram words found in them were classified into six categories. The findings reveal that the use of Kutriyalugaram in Naladiyar not only demonstrates grammatical excellence but also serves as an effective medium for emphasizing virtue, morality, and principles of life. Therefore, this study contributes meaningfully to the field of Tamil grammatical research.

**Keywords:** Naladiyar, Kutriyalugaram

### முன்னுரை

மொழி மனிதர்களின் கருத்துகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் முக்கியத் தொடர்புக் கருவியாகும். தொன்மையும் செம்மையும் வாய்ந்த தமிழ்மொழி இலக்கணச் செழுமைக்குப் பெயர் பெற்றது. அவற்றுள் குற்றியலுகரம் ஒரு முக்கியமான ஒலியியல் கூறாகும். சொல்லின் இறுதியில் வரும் குறில் ‘உ’ ஒலி குறுகி ஒலிப்பதே குற்றியலுகரம் எனப்படுகிறது. இது மொழியின் இனிமையையும் செய்யுளின் ஓசைநயத்தையும் மேம்படுத்துகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இடம்பெறும் நாலடியார் அறம், ஒழுக்கம் போன்ற வாழ்க்கை நெறிகளை எடுத்துரைக்கும் சிறப்புமிக்க நீதிநூலாகும். இந்நூலில் காணப்படும் குற்றியலுகரச் சொற்கள் செய்யுளின் கருத்துச் செறிவையும் இலக்கிய அழகையும் வெளிப்படுத்துகின்றன. நாலடியாரின் இலக்கியச் சிறப்புகள் குறித்து பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அதில் இடம்பெறும் குற்றியலுகரத்தின் இலக்கணப் பயன்பாட்டை மையமாகக் கொண்ட ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. எனவே, இவ்வாய்வு நூலாய்வு முறையின் அடிப்படையில் நாலடியாரில் இடம்பெறும் குற்றியலுகரச் சொற்களைத் தொகுத்து அவற்றின் இலக்கணப் பயன்பாட்டை ஆராய்கிறது.

### ஆய்வின் நோக்கம்

நாலடியாரில் இடம்பெறும் குற்றியலுகரச் சொற்களை அடையாளம் கண்டு அவற்றைத் தொகுத்தறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

### ஆய்வின் வரையறை

இவ்வாய்வு நாலடியாரில் காணப்படும் குற்றியலுகரத்தின் இலக்கணப் பயன்பாட்டை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளது. நாலடியாரின் முழு நூலும் ஆய்வுக்கு உட்படுத்தப்படாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு செய்யுள்கள் மட்டும் ஆய்வுப் பொருளாக எடுத்துக்கொள்ளப்பட்டன. துறவறவியல், இல்லறவியல், இன்பவியல், பகையியல் ஆகிய இயல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரங்களில் இடம்பெறும் குற்றியலுகரச் சொற்கள் மட்டும் தொகுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. மேலும், இவ்வாய்வு குற்றியலுகரத்தின் பயன்பாட்டை மட்டுமே ஆராய்வதால், பிற இலக்கணக் கூறுகள் இதில் ஆராயப்படவில்லை.

### ஆய்விலக்கிய மீள்நோக்கு

தமிழ் இலக்கியக் கடலில் நாலடியாரைப் பற்றி பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்விலக்கியங்களை ஆராயும்போது, குற்றியலுகர இலக்கணத்தை மையமாகக் கொண்ட சில புதிய ஆய்வுகள் குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுகின்றன. ஜெயஸ்ரீ சுப்ரமணியம், மனோன்மணி தேவி (2025), பொருளியல் அதிகாரத்திலுள்ள 15 திருக்குறள்களில் காணப்படும் குற்றியலுகரத்தினைப் பகுப்பாய்வு செய்துள்ளனர். கோகிலா ஸ்ரீராமன், மனோன்மணி தேவி அண்ணாமலை (2025), ஆய்வில் பத்து வெண்பாப் பாடல்களைக் குறிப்பிட்டு அவற்றில் காணப்படும் குற்றியலுகரச் சொற்களை ஆய்வு செய்துள்ளனர். ஆய்வாளர்கள் பாடல் 1 முதல் 30 வரையிலான வெண்பாப் பாடல்களைப் பட்டியலிட்டு அவற்றில் காணப்படும் குற்றியலுகரச் சொற்களை வகைப்படுத்தி விளக்கியுள்ளனர்.

கவிதா (2022), நாலடியாரில் காணப்படும் தனிமனிதக் கோட்பாடுகளை ஆராய்ந்துள்ளார். மனிதனின் ஒழுக்கம், தன்னம்பிக்கை, சுய முன்னேற்றம், சமூகப் பொறுப்பு போன்ற பண்புகள் நாலடியாரில் எவ்வாறு வலியுறுத்தப்படுகின்றன என்பதை ஆய்வில் விளக்கியுள்ளார். சங்கர் (2018), நாலடியாரில் இடம்பெறும் விமர்சனச் சிந்தனைகளை ஆய்வுச் செய்துள்ளார். மனிதர்கள் தங்களின் வாழ்வில் நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து முடிவெடுக்க வேண்டியதன் அவசியத்தை நாலடியார் எவ்வாறு எடுத்துரைக்கிறது என்பதை விளக்கியுள்ளார். பின்னர் சங்கர் (2020), நாலடியாரில் கூறப்பட்டுள்ள உயர்நிலைச் சிந்தனைகளையும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் வாழ்வியல் கருத்துக்களையும் பற்றி விளக்கியுள்ளார். தனிமனித முன்னேற்றம், சமூக நல்லிணக்கம், உயர்ந்த வாழ்வியல் நெறிகளை நாலடியார் வலியுறுத்துவதை ஆய்வில் எடுத்துக்காட்டியுள்ளார்.

கீதா (2024), நாலடியாரின் பெருமைகளையும் இலக்கிய அமைப்பையும் பற்றி எடுத்துரைத்துள்ளார். நாலடியார் வெறும் அறநூலாக மட்டுமன்றி, தமிழர் வாழ்க்கை முறையையும் பண்பாட்டையும் பிரதிபலிக்கும் நீதி இலக்கியமாகவும் திகழ்கிறது என்பதை அவர் ஆய்வில் விளக்கியுள்ளார்.

மேலும், சுந்தரராசு (2022), தொல்காப்பியரின் ஒலியியல் கோட்பாடுகளை விரிவாக ஆராய்ந்து தமிழ் இலக்கண மரபின் அடித்தளங்களை விளக்கியுள்ளார். எனவே, "நாலடியாரில் காணப்படும் குற்றியலுகரத்தின் இலக்கணப் பயன்பாடு" என்ற தலைப்பிலான இந்த ஆய்வு, நாலடியாரின் இலக்கணப் பரிமாணங்களை வெளிக்கொணரும் ஒரு புதிய ஆய்வாக அமையும்.

**ஆய்வு நெறிமுறை**

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட நூலாய்வாகும். துறவறவியல், இல்லறவியல், இன்பவியல், பகையியல் ஆகிய இயல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு நாலடியார் செய்யுள்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அவற்றில் இடம்பெறும் கு, சு, டு, து, பு, று ஆகிய குற்றியலுகரச் சொற்கள் இனங்காணப்பட்டு, வன்றொடர்க்குற்றியலுகரம், மென்றொடர்க்குற்றியலுகரம், இடைத்தொடர்க்குற்றியலுகரம், உயிர்த்தொடர்க்குற்றியலுகரம், நெடிற்றொடர்க்குற்றியலுகரம், ஆய்தத்தொடர்க்குற்றியலுகரம் என வகைப்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டன. மேலும், இந்த ஆய்வின் தலைப்போடு தொடர்புடைய இலக்கண நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், முந்தைய ஆய்வுகள் துணை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம், நாலடியாரில் காணப்படும் குற்றியலுகரத்தின் இலக்கணப் பயன்பாடு ஆராயப்பட்டது.

**ஆய்வுக் கண்டுபிடிப்பும் கலந்துரையாடலும்**

**இயல் 1 : துறவறவியல்**

**அதிகாரம் 2 : இளமை நிலையாமை**

**செய்யுள் : 13**

<u>சொற்றளர்ந்து</u> கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப்

பற்<u>கழன்று</u> பண்டம் பழிகாறு மிற்<u>செறிந்து</u>

காமநெறிபடருங் <u>கண்ணினார்க்</u> கில்லையே

ஏமநெறிபடரு <u>மாறு</u>.

| சொல் | குற்றியலுகர வகை |
|---|---|
| சொற்றளர்ந்து | மென்றொடர்க்குற்றியலுகரம் |
| கழன்று | மென்றொடர்க்குற்றியலுகரம் |
| செறிந்து | மென்றொடர்க்குற்றியலுகரம் |
| கண்ணினார்க்கு | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| ஆறு | நெடிற்றொடர்க்குற்றியலுகரம் |

**குற்றியலுகரப் பகுப்பாய்வு :**

இளமை நிலையாமை எனும் அதிகாரத்தில் வீற்றிருக்கும் 13ஆம் செய்யுளின் முதல் வரியில் உள்ள 'சொற்றளர்ந்து' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ந்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் மென்றொடர்க்குற்றியலுகரமாகும். அதனைத் தொடர்ந்து, இரண்டாம் வரியில் உள்ள 'கழன்று' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ன்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. இச்சொல்லும் மென்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். அடுத்து, 'செறிந்து' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல்லும் மென்றொடர்க்குற்றியலுகரமாகும்.

மூன்றாவது வரியில் 'கண்ணினார்க்கு' எனும் சொல்லில் 'கு' உகர ஈற்றுக்கு அயல் எழுத்து 'க்' என்ற வல்லின மெய்யெழுத்து வருவதால் இது வன்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். தொடந்து, நான்காவது வரியில் உள்ள 'ஆறு' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ஆ' என்ற நெடில் எழுத்தைத் தொடர்ந்து

‘று’ என்ற உகரம் வருகிறது. இச்சொல் நெடிற்றொடர்க்குற்றியலுகரம் ஆகும். மொத்தமாக இச்செய்யுள் ஒரு வன்றொடர்க்குற்றியலுகரம், 3 மென்றொடர்க்குற்றியலுகரங்கள், ஒரு நெடிற்றொடர்க்குற்றியலுகரம் என 5 குற்றியலுகரச் சொற்களை ஏற்று வந்துள்ளது.

**இயல் 1 : துறவறவியல்**

**அதிகாரம் 6 : துறவு**

**செய்யுள் : 51**

விளக்குப் புகவிருண் மாய்ந்தாங்கொருவன்

தவத்தின்முன் னில்லாதாம் பாவம் – விளக்கு நெய்

தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை

தீர்விடத்து நிற்குமாந் தீது

| சொல் | குற்றியலுகர வகை |
|---|---|
| விளக்குப் | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| மாய்ந்தாங்கு | மென்றொடர்க்குற்றியலுகரம் |
| தேய்விடத்துச் | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| சென்று | மென்றொடர்க்குற்றியலுகரம் |
| பாய்ந்தாங்கு | மென்றொடர்க்குற்றியலுகரம் |
| தீர்விடத்து | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| தீது | நெடிற்றொடர்க்குற்றியலுகரம் |

**குற்றியலுகரப் பகுப்பாய்வு :**

செய்யுளின் முதல் வரியில் உள்ள ‘விளக்குப்’ எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘க்’ என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘கு’ என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர்க்குற்றியலுகரமாகும். வன்தொடர் குற்றியலுகரத்துக்குப் பின் ‘பு’ என்ற வல்லின எழுத்து முதல் எழுத்தாக வருவதால் வலிமிகுந்துள்ளது. அதனைத் தொடர்ந்து, முதல் வரியில் உள்ள ‘மாய்ந்தாங்கு’ எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘ங்’ என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘கு’ என்ற உகரம் வருகிறது. இச்சொல் மென்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். மூன்றாவது வரியில் உள்ள ‘தேய்விடத்துச்’ என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘து’ என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர்க்குற்றியலுகரமாகும். வன்றொடர்க்குற்றியலுகரத்துக்குப் பின் ‘செ’ என்ற வல்லின எழுத்து முதல் எழுத்தாக வருவதால் வலிமிகுந்துள்ளது.

மூன்றாவது வரியில் ‘சென்று இருள்’ எனும் சொல்லில் ‘று’ உகர ஈற்றுக்கு அயல் எழுத்து ‘ன்’ என்ற மெல்லின மெய்யெழுத்து வருவதால் இது மென்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். தொடந்து, மூன்றாவது வரியில் உள்ள ‘பாய்ந்தாங்கு’ எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து ‘ங்’ என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து ‘கு’ என்ற உகரம் வருகிறது. இச்சொல் மென்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். நான்காம் வரியில் ‘தீர்விடத்து’ எனும் சொல்லின் ஈற்றெழுத்து குற்றியலுகரம் ஆகும். ‘து’ என்ற எழுத்தின் அயல் எழுத்து ‘த்’ எனும் வல்லின எழுத்தாகும். எனவே, இச்சொல் வன்றொடர்க்குற்றியலுகரம் ஆகும். இறுதியாக, நான்காம் வரியில் உள்ள ‘தீது’ எனும் சொல் நெடிற்றொடர்க்குற்றியலுகரம். காரணம், ‘து’ எனும் உகரத்துக்கு முன் ‘தீ’ எனும் நெடில் எழுத்து வருவதால் இதை நாம் நெடிற்றொடர்க்குற்றியலுகரம் என்றே அழைப்போம். மொத்தமாக இச்செய்யுளில் 7 குற்றியலுகரச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

**இயல் 2 : இல்லறவியல்**

**அதிகாரம் 10 : ஈகை**

**செய்யுள் : 98**

<u>நடுக்குற்றுத்</u> தற்சேர்ந்தார் துன்பந் துடையார்

<u>கொடுத்து</u>த்தான் றுய்ப்பினு மீண்டுங்கா – லீண்டு

<u>மிடுக்குற்றுப்</u> பற்றினு <u>நில்லாது</u> செல்வம்

விடுக்கும் வினையுலந்தக் கால்.

| சொல் | குற்றியலுகர வகை |
|---|---|
| நடுக்கு | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| உற்றுத் | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| இடுக்குற்றுப் | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| நில்லாது | உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் |
| கொடுத்து | வன்றொடர்க்குற்றியலுகரம் |

**குற்றியலுகரப் பகுப்பாய்வு :**

செய்யுளின் முதல் வரியில் உள்ள 'நடுக்கு' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'க்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர்க்குற்றியலுகரம் ஆகும். அதனைத் தொடர்ந்து, முதல் வரியில் உள்ள 'உற்றுத்' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ற்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. இச்சொல் வன்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். வன்றொடர்க்குற்றியலுகரத்துக்குப் பின் 'த' என்ற வல்லின எழுத்து முதல் எழுத்தாக வருவதால் 'த்' எனும் எழுத்துத் தோன்றி வலிமிகுந்துள்ளது.

இரண்டாவது வரியில் உள்ள 'கொடுத்து' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர்க்குற்றியலுகரமாகும். மூன்றாவது வரியின் முதல் சொல்லான 'இடுக்குற்றுப்' எனும் சொல்லில் 'று' உகர ஈற்றுக்கு அயல் எழுத்து 'ற்' என்ற வல்லின மெய்யெழுத்து வருவதால் இது வன்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். வன்றொடர்க்குற்றியலுகரத்துக்குப் பின் 'ப' என்ற வல்லின எழுத்து முதல் எழுத்தாக வருவதால் 'ப்' எனும் எழுத்துத் தோன்றி வலிமிகுந்துள்ளது. இறுதியாக, 'நில்லாது' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'லா' என்ற உயிர்மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. இச்சொல் உயிர்த்தொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். காரணம், 'து' எனும் உகரத்துக்கு முன் 'லா' எனும் உயிர்மெய் எழுத்தை 'ல்+ஆ' எனப் பிரிக்கும் பொழுது 'ஆ' என்பது எழுத்து உயிரெழுத்தாகும். உயிரெழுத்தைத் தொடர்ந்து வரும் உகரம் உயிர்த்தொடர்க்குற்றியலுகரமாகும். மொத்தமாக இச்செய்யுளில் நான்கு வன்றொடர்க்குற்றியலுகரங்கள், ஒரு உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் என 5 குற்றியலுகரச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

**இயல் 2 : இல்லறவியல்**

**அதிகாரம் 15 : குடிப்பிறப்பு**

**செய்யுள் : 150**

<u>எற்</u>றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தார்

<u>அற்றுத்</u>தற் <u>சேர்ந்தார்க்</u> சுசைவி<u>டத்</u> <u>தூற்றா</u>வர்

அற்றக் கடைத்து <u>மகல்யா</u> றகழ்ந்தக்காற்

றெற்றெனத் தெண்ணீர் படும்.

| சொல் | குற்றியலுகர வகை |
|---|---|
| எற்று | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| அற்று | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| சேர்ந்தார்க்கு | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| இடத்து | வன்தொடர்க்குற்றியலுகரம் |
| ஊற்று | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| அகல்யாறு | உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் |

**குற்றியலுகரப் பகுப்பாய்வு :**

செய்யுளின் முதல் வரியில் உள்ள 'எற்று' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ற்' என்ற வல்லின மெய்யெழுத்தைத்தொடர்ந்து'று'என்றஉகரம்வருகிறது.எனவே,இச்சொல்வன்றொடர்க்குற்றியலுகரமாகும். அதனைத் தொடர்ந்து, இரண்டாம் வரியில் உள்ள 'அற்றுத்' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ற்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. இச்சொல் வன்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். வன்றொடர்க்குற்றியலுகரத்துக்குப் பின் 'த' என்ற வல்லின எழுத்து முதல் எழுத்தாக வருவதால் 'த்' எனும் எழுத்துத் தோன்றி வலிமிகுந்துள்ளது.

அடுத்து, 'சேர்ந்தார்க்கு' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'கு' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர்க்குற்றியலுகரமாகும். 'இடத்து' எனும் சொல்லில் 'து' உகர ஈற்றுக்கு அயல் எழுத்து 'த்' என்ற வல்லின மெய்யெழுத்து வருவதால் இது வன்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். தொடர்ந்து, 'ஊற்று' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ற்' என்ற வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல் வன்றொடர்க்குற்றியலுகரமாகும். இறுதியாக, 'அகல்யாறு' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'யா' என்ற உயிர்மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. இச்சொல் உயிர்த்தொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். காரணம், 'று' எனும் உகரத்துக்கு முன் 'யா' எனும் உயிர்மெய் எழுத்தை 'ய்+ஆ' எனப் பிரிக்கும் பொழுது 'ஆ' என்பது எழுத்து உயிரெழுத்தாகும். உயிரெழுத்தைத் தொடர்ந்து வரும் உகரம் உயிர்த்தொடர்க்குற்றியலுகரமாகும். ஆகவே, இச்செய்யுளில் 6 குற்றுயலுகரச் சொற்களுல் 5 வன்றொடர்க்குற்றியலுகரச் சொற்களும் ஒரு உயிர்த்தொடர்க்குற்றியலுகரச் சொல்லும் இடம்பெற்றுள்ளன.

| | |
|---|---|
| **இயல் 3** | **: இன்பவியல்** |
| **அதிகாரம் 26** | **: அறிவின்மை** |
| **செய்யுள்** | **: 253** |

கல்லென்று தந்தை கழற வதனையோர்

சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன் – மெல்ல

எழுத்தோலை பல்லார்முன் னீட்ட விளியா

வழுக்கோலைக் கொண்டு விடும்.

| சொல் | குற்றியலுகர வகை |
|---|---|
| என்று | மென்றொடர்க்குற்றியலுகரம் |
| கொள்ளாது | உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் |
| எழுத்து | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| வழுக்கு | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| கொண்டு | மென்றொடர்க்குற்றியலுகரம் |

**குற்றியலுகரப் பகுப்பாய்வு :**

செய்யுளின் முதல் வரியில் உள்ள 'என்று' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ன்' என்ற மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'று' என்ற உகரம் வருகிறது. எனவே, இச்சொல்

மென்றொடர்க்குற்றியலுகரமாகும். அதனைத் தொடர்ந்து, இரண்டாம் வரியில் உள்ள 'கொள்ளாது' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ளா' என்ற உயிர்மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. இச்சொல் உயிர்த்தொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். காரணம், 'து' எனும் உகரத்துக்கு முன் 'ளா' எனும் உயிர்மெய் எழுத்தை 'ள்+ஆ' எனப் பிரிக்கும் பொழுது 'ஆ' என்பது எழுத்து உயிரெழுத்தாகும். உயிரெழுத்தைத் தொடர்ந்து வரும் உகரம் உயிர்த்தொடர்க்குற்றியலுகரமாகும். மூன்றாம் வரியில் முதல் எழுத்தான 'எழுத்து' எனும் சொல்லில் 'து' உகர ஈற்றுக்கு அயல் எழுத்து 'த்' என்ற வல்லின மெய்யெழுத்து வருவதால் இது வன்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். அடுத்து, 'வழக்கு' எனும் சொல்லில் 'கு' உகர ஈற்றுக்கு அயல் எழுத்து 'க்' என்ற வல்லின மெய்யெழுத்து வருவதால் இச்சொல்லும் வன்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும்.

இறுதியாக, 'கொண்டு' எனும் சொல்லில் 'டு' எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ண்' என்ற மெல்லின மெய்யெழுத்து வருவதால் இது மென்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். ஆகவே, இச்செய்யுளில் மொத்தம் 5 குற்றுயலுகரச் சொற்களுல் இரு வன்றொடர்க்குற்றியலுகரச் சொற்களும், இரு மென்றொடர்க்குற்றியலுகரச் சொற்களும், ஒரு உயிர்த்தொடர்க்குற்றியலுகரச் சொல்லும் இடம்பெற்றுள்ளன.

**இயல் 3 : இன்பவியல்**
**அதிகாரம் 26 : அறிவின்மை**
**செய்யுள் : 254**

கல்லாது நீண்ட வொருவ னுலகத்து

நல்லறி வாள ரிடைப்புக்கு – மெல்ல

இருப்பினு நாயிருந் தற்றே யிராஅ

துரைப்பினு நாய்குரைத் தற்று.

| சொல் | குற்றியலுகர வகை |
|---|---|
| கல்லாது | உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் |
| அறிவாளரிடைப்புக்கு | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| இருந்து | மென்றொடர்க்குற்றியலுகரம் |
| தற்று | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| இராது | உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் |

**குற்றியலுகரப் பகுப்பாய்வு :**

அறிவின்மை அதிகாரத்திலுள்ள 254ஆம் செய்யுளின் முதல் வரியில் உள்ள 'கல்லாது' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'லா' என்ற உயிர்மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. இச்சொல் உயிர்த்தொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். காரணம், 'து' எனும் உகரத்துக்கு முன் 'லா' எனும் உயிர்மெய் எழுத்தை 'ல்+ஆ' எனப் பிரிக்கும் பொழுது 'ஆ' என்பது எழுத்து உயிரெழுத்தாகும். உயிரெழுத்தைத் தொடர்ந்து வரும் உகரம் உயிர்த்தொடர்க்குற்றியலுகரமாகும். இரண்டாம் வரியின் இரண்டாம் எழுத்தான 'அறிவாளரிடைப்புக்கு' எனும் சொல்லில் 'கு' உகர ஈற்றுக்கு அயல் எழுத்து 'க்' என்ற வல்லின மெய்யெழுத்து வருவதால் இது வன்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும்.

அடுத்து, 'இருந்து' எனும் சொல்லில் 'து' உகர ஈற்றுக்கு அயல் எழுத்து 'ந்' என்ற மெல்லின மெய்யெழுத்து வருவதால் இச்சொல்லும் மென்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். 'அற்று' எனும் சொல்லில் 'று' எனும் ஈற்றுக்கு அயல் எழுத்து 'ற்' என்ற வல்லின மெய்யெழுத்து வருவதால் இது வன்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். இறுதியாக, 'இராது' என்ற சொல்லில் 'ரா' எனும் உயிர்மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. இச்சொல் உயிர்த்தொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். காரணம், 'து' எனும் உகரத்துக்கு முன் 'ரா' எனும் உயிர்மெய் எழுத்தை 'ர்+ஆ' எனப் பிரிக்கும் பொழுது 'ஆ' என்பது எழுத்து உயிரெழுத்தாகும். உயிரெழுத்தைத் தொடர்ந்து வரும் உகரம் உயிர்த்தொடர்க்குற்றியலுகரமாகும். ஆகவே, இச்செய்யுளில் மொத்தம் 5 குற்றுயலுகரச் சொற்களுல் இரு வன்றொடர்க்குற்றியலுகரச் சொற்களும், ஒரு மென்றொடர்க்குற்றியலுகரச் சொல்லும், இரு உயிர்த்தொடர்க்குற்றியலுகரச் சொற்களும் இடம்பெற்றுள்ளன.

**இயல் 6 : பகைவியல்**

**அதிகாரம் 36 : கயமை**

**செய்யுள் : 359**

இன்றாது மிந்நிலையே யாது மினிச்சிறிது

நின்றாது மென்று நினைத்திருந் – தொன்றி

யுரையின் மகிழ்ந்துதம் முள்ளம்வே றாகி

மரையிலையின் மாய்ந்தார் பலர்.

| சொல் | குற்றியலுகர வகை |
|---|---|
| இன்று | மென்றொடர்க்குற்றியலுகரம் |
| சிறிது | உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் |
| நின்று | மென்றொடர்க்குற்றியலுகரம் |
| என்று | மென்றொடர்க்குற்றியலுகரம் |
| நினைத்து | வன்றொடர்க்குற்றியலுகரம் |
| மகிழ்ந்து | மென்றொடர்க்குற்றியலுகரம் |
| வேறு | நெடிற்றொடர்க்குற்றியலுகரம் |

**குற்றியலுகரப் பகுப்பாய்வு :**

கயமை அதிகாரத்திலுள்ள 359ஆம் செய்யுளில் உள்ள 'இன்று, என்று, நின்று' ஆகிய சொற்களின் 'று' எனும் உகர ஈற்றுக்கு அயல் எழுத்து 'ன்' என்ற மெல்லின மெய்யெழுத்து வருவதால் இச்சொல்லும் மென்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். அடுத்ததாக, 'சிறிது' எனும் சொல்லின் ஈற்றுக்கு அயல் எழுத்து 'றி' என்ற உயிர்மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'து' என்ற உகரம் வருகிறது. இச்சொல் உயிர்த்தொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். காரணம், 'து' எனும் உகரத்துக்கு முன் 'றி' எனும் உயிர்மெய் எழுத்தை 'ற்+இ' எனப் பிரிக்கும் பொழுது 'ஈ' என்பது எழுத்து உயிரெழுத்தாகும். உயிரெழுத்தைத் தொடர்ந்து வரும் உகரம் உயிர்த்தொடர்க்குற்றியலுகரமாகும். இரண்டாம் வரியின் மூன்றாம் சொல்லான 'நினைத்து' எனும் சொல்லில் 'து' உகர ஈற்றுக்கு அயல் எழுத்து 'த்' என்ற வல்லின மெய்யெழுத்து வருவதால் இது வன்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும். அடுத்து, 'மகிழ்ந்து' எனும் சொல்லில் 'து' உகர ஈற்றுக்கு அயல் எழுத்து 'ந்' என்ற மெல்லின மெய்யெழுத்து வருவதால் இச்சொல்லும் மென்றொடர்க்குற்றியலுகர வகையைச் சேரும்.

இறுதியாக, 'வேறு' எனும் சொல் நெடிற்றொடர்க்குற்றியலுகரம். காரணம், 'று' எனும் உகரத்துக்கு முன் 'வே' எனும் நெடில் எழுத்து வருவதால் இதை நாம் நெடிற்றொடர்க்குற்றியலுகரம் என்றே அழைப்போம். ஆகவே, இச்செய்யுளில் மொத்தம் 7 குற்றுயலுகரச் சொற்களுல் ஒரு வன்றொடர்க்குற்றியலுகரச் சொல்லும், நான்கு மென்றொடர்க்குற்றியலுகரச் சொற்களும், ஒரு உயிர்த்தொடர், ஒரு நெடிற்றொடர்க்குற்றியலுகரச் சொல்லும் இடம்பெற்றுள்ளன.

**ஆய்வின் முடிவு**

இவ்வாய்வு நாலடியாரில் காணப்படும் குற்றியலுகரத்தின் இலக்கணப் பயன்பாட்டை ஆராயும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு செய்யுள்களில் இடம்பெற்ற குற்றியலுகரச் சொற்கள் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்ட வகைகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆய்வின் முடிவில், நாலடியாரில் மென்றொடர்க்குற்றியலுகரமும் வன்றொடர்க்குற்றியலுகரமும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. இவை செய்யுளின் ஓசைநயம், இசைநயம், கருத்துத் தெளிவை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகின்றன. மேலும், குற்றியலுகரம் ஒலியியல் கூறாக மட்டுமன்றி, செய்யுள் அமைப்பைச் செம்மைப்படுத்தும் இலக்கணக் கூறாகவும் விளங்குகிறது என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதன் மூலம், நாலடியார் அறநெறி நூலாக மட்டுமன்றி தமிழ் மொழியின் இலக்கண வளத்தையும் பிரதிபலிக்கும் இலக்கியமாகத் திகழ்கிறது என்பதும் புலனாகிறது. இவ்வாய்வு நாலடியாரின் இலக்கணப் பரிமாணத்தை வெளிக்கொணரும் முயற்சியாக அமைந்து, எதிர்கால இலக்கண

ஆய்வுகளுக்கான அடித்தளமாக அமைகிறது.

**ஆய்வின் பரிந்துரைகள்**

இவ்வாய்வு நாலடியாரில் காணப்படும் குற்றியலுகரத்தின் இலக்கணப் பயன்பாட்டை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளதால், எதிர்காலத்தில் நாலடியாரின் 400 செய்யுள்களையும் முழுமையாக ஆய்வுச் செய்து குற்றியலுகரத்தின் பயன்பாடுகளையும் இலக்கணச் சிறப்புகளையும் விரிவாக ஆராயலாம். மேலும், குற்றியலிகரம், வேற்றுமை உருபுகள், அளபெடை, உவம உருபு போன்ற பிற இலக்கணக் கூறுகளின் பயன்பாட்டையும் ஆய்வு செய்யலாம். அதேபோல், நாலடியாரில் காணப்படும் குற்றியலுகரப் பயன்பாட்டை திருக்குறள், பழமொழி நானூறு, இன்னா நாற்பது, இனியவை நாற்பது போன்ற பிற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் தமிழ் இலக்கியங்களில் குற்றியலுகரத்தின் வளர்ச்சியையும் தொடர்ச்சியையும் வெளிக்கொணர முடியும். மேலும், குற்றியலுகரம் செய்யுளின் ஓசைநயம், இசைநயம் ஆகியவை பொருள் வெளிப்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை மொழியியல் நோக்கில் ஆராய்வதும் பயனுள்ளதாக அமையும். இத்தகைய ஆய்வுகள் தமிழ் இலக்கண மரபின் செழுமையையும் நாலடியாரின் மொழியியல் சிறப்பையும் மேலும் தெளிவுபடுத்த உதவும்.

**துணைநூற்பட்டியல்**


Geetha, M. (2024). The glory of Naladiyar: நாலடியாரின் பெருமைகள். Kalanjiyam – International Journal of Tamil Studies, 5(1), 79–89. https://ngmtamil.in/kalanjiyam-tamil/index.php/kalanjiyam/article/view/107

Kavitha, B. (2022). Naladiyar's individualism theory. International Research Journal of Tamil, 4(S-13), 256–262. https://doi.org/10.34256/irjt224s1337

Kogila Sriraman, & Manonmani Devi, M. A. R. Annamalai. (2025). மூதுரையில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு ஓர் ஆய்வு [The use of Kutriyalugaram grammar in Muuthurai]. Malaysian Journal of Tamil, 3(2), 13–25. https://doi.org/10.1315/mjt.v3i2.109

Krishnan, P., & Manonmani Devi, M. A. R. (2025). A study on the usage of kutriyalukaram grammar in Arputha Thiruvandhadhi: அற்புதத் திருவந்தாதியில் குற்றியலுகர இலக்கணத்தின் பயன்பாடு – ஓர் ஆய்வு. Journal of Tamil Peraivu, 14(1), 115–120. https://doi.org/10.22452/JTP.vol14no1.13

Manikandan, J., & Kanmani, S. (2022). Educational ideals emphasized in the Naladiyar. International Research Journal of Tamil, 4(4), 210–217. https://doi.org/10.34256/irjt22427

Premkumar, R. (2022). Individual theory of Tholkappiyam. International Research Journal of Tamil, 4(2), 192–197. https://doi.org/10.34256/irjt22224

Sangar, M. (2020). Pemikiran kritis dalam teks Naladiyar [Critical thinking in Naladiyar text]. DIS Journal (Indian Studies Journal), 13, 1–12.

Subramaniam, J., & Manonmani Devi, M. A. R. (2025). A study on kutriyalukaram in Thirukkural: திருக்குறளில் குற்றியலுகரம் இலக்கணத்தின் பயன்பாடு – ஓர் ஆய்வு. Malaysian Journal of Tamil, 3(1), 40–47. https://doi.org/10.1315/mjt.v3i1.108

Tharisiniy, K. (2023). Naaladiyaaril vettrumaithogai ilakkanam: நாலடியாரில் வேற்றுமைத்தொகை இலக்கணம். Malaysian Journal of Tamil, 1(2), 150–160. https://kpatmalaysia.com/ojs/index.php/mjt/article/view/69

ஆறுமுகஞ்சேர்வை, வி. (தொகுப்பும் விரிவுரையும்). (2013). நாலடியார் மூலமும் செம்பூர் வித்துவான் வி. ஆறுமுகஞ்சேர்வை அவர்களின் விரிவுரையும். தமிழ்ப் பல்கலைக்கழகம்.

கவிநித்யா ஸ்ரீ ஞானசுந்தரம். (2022). குற்றியலுகரம் கற்பிக்க கேன்வா பயன்பாட்டினிலுள்ள காமிக் ஸ்டிரிப் மூலம் ஒரு புத்தாக்கம் [An innovation through the comic strip in the Canva app to teach Kutriyalugaram]. இனம்: பல்துறைப் பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ், 7(29), 104–116. https://www.inamtamil.com/index.php/journal/article/view/34

சீனி நைனா முகம்மது, செ. (2022). நல்ல தமிழ் இலக்கணம். உங்கள் குரல்.

சுப்பிரமணியன், ச. வே. (2012). பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்: மூலமும் தெளிவுரையும். மணிவாசகர் பதிப்பகம்.

மனோன்மணி தேவி அண்ணாமலை, & சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல். (2025). இலக்கணச் சாரல். உமா பதிப்பகம்.